**for domestic consumption, recreation, etc., drastic cut** செய்தால் பரவாயில்லை. அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆகவே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலை, மற்றும் சர்க்கரை ஆலைகளுக்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, இப்பொழுது மின்சார வெட்டு 25 சத விகிதம் எல்லாவற்றிற்கும் அல்ல. "கன்டினியூவஸ் பிராசஸ்" என்று தொடரியக்க நிறுவனங்களுக்கு 15 சத வீதமாகவும், செய்திப் பத்திரிகைகளுக்கு 10 சத வீதமாகவும் என்று இரண்டு அறிவிப்புகள் விட்டிருக்கிறோம். எனவே, தனிப்பட்ட முறையிலே முக்கியத்துவத்தை உணர்ந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தால் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போன்று யோசிக்கலாம்.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 6—12—1972-ம் நாள் அலுவல் ஆய்வுக் குழு எடுத்த முடிவின்படி சட்டப் பேரவை நடப்புக் கூட்டத் தொடரின் மேல் நிகழ்ச்சி விபரம்:—

| | | | |
|---|---|---|---|
| 7—12—1972 (வியாழக்கிழமை) | .. | .. | 4—12—1972-ம் நாள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முன்மொழிந்த அமைச்சரவையின்மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். |
| 8—12—1972 (வெள்ளிக்கிழமை) | .. | .. | ஷ |
| 9—12—1972 (சனிக்கிழமை) | .. | .. | ஷ |
| 10—12—1972 (ஞாயிற்றுக்கிழமை) | .. | .. | விடுமுறை. |
| 11—12—1972 (திங்கட்கிழமை) | .. | .. | அரசினர் சட்ட முன்வடிவுகளும், தீர்மானங்களும். |
| 12—12—1972 (செவ்வாய்க்கிழமை) | .. | .. | ஷ |
| 13—12—1972 (புதன்கிழமை) | .. | .. | ஷ |

1972 டிசம்பர் 6] [ ]

| | |
|---|---|
| 14—12—1972 (வியாழக்கிழமை) .. .. | (1) 1972-73-ம் ஆண்டுக்கான இரண்டாம் துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். |
| | (2) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை அறிமுகம் செய்தல். |
| 15—12—1972 (வெள்ளிக்கிழமை) .. .. | (1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுதலும், நிறைவேற்றலும். |
| | (2) அரசினர் சட்ட முன்வடிவுகள் எவையேனுமிருப்பின் அவை. |

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·25-க்கு ஒற்றிவைக்கப்பட்டது.

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

29. Notification issued with G.O. R. No. 2250, Revenue, dated the 7th October 1972, in regard to exemption from liability to entertainments tax to the film show organised by the President, Overseas Student's Association, Madras, on 22nd October 1972 at Devi Theatre, Madras. [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act of* 1939.)]

30. Notification issued with G.O. Ms. No. 2099, Rural Development and Local Administration, dated the 1st October 1972, in regard to an amendment to the Madras Khadi and Village Industries Board Rules, 1966. [*Laid on the Table of the House under section* 29 (3) *of the Tamil Nadu Khadi and Village Industries Board Act*, 1959 (*Tamil Nadu Act* 18 *of* 1959).]